மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.10/2012

2024–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தசரதன்(Dw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.19.12.2024</u>
<u>பி.வா.சா.1</u>

**<u>சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்பட்டார்:–</u>**

நான் இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 5ம்பிரதிவாதி என்ற முறையில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்வழக்குரை பாரா 12ல் சர்வே நம்பர்.471 ல் கண்ட 50 ஏக்கர் 30 செண்டில் மேல்புறம் 5 ஏக்கர் 3 செண்ட் அளவுள்ள நிலத்தை 1, 2 பிரதிவாதிகள் 01.11.1994 தேதியிட்ட கிரையம் பத்திரம் மூலமாக அந்தோணி பிச்சை வாரிசுதாரர்களிடமிருந்து கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 01.11.1994 கிரையப்பத்திரத்தை நீதிமன்றததில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரை பாரா 13ல் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் 15.05.2000 தேதியில் ஒரு உத்தரவு போட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை வழக்கறிஞர் போட்டுள்ளார். அந்த உத்தரவு நகலை நீதிமன்றத்தில் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.471/8 என்பது தாவா சொத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் யோகா இடத்திற்கு தெற்கு பக்கம் உள்ளது, வாதியின் அனுபவம் செய்து வரும் சொத்தின் வடக்கு பக்கம் உள்ளது. 1, 2 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்ட் தான் 3ம் பிரதிவாதியாவார். எத்டே பாதரிடமிருந்து தான் 14.07.2008 தேதியில் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். அதை எதிர்வழக்குரை பாரா 15ல் சர்வே நம்பர்.471/1A1A ல் வடக்கு புறமுள்ள 35 செண்ட் என காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 35 செண்டுக்கு தான் சர்வே நம்பர். 471/10B என உட்பிரிவு செய்ப்பட்டு பட்டா எண்.6445 பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பட்டா எண்.6445 ஐ எனது தரப்பு ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். 14.07.2008 தேதியிட்ட கிரையபத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.12.19 15:40:26 +0530

சரிதான். எனது எதிர்வழககுரை பாரா 14 ல் சர்வே எண்.471/1A1A ல் கண்ட 25 செண்ட் நிலத்தை 1, 2 பிரதிவாதிகளிடம் இருந்து 02.03.2009 தேதியில் கிரையம் வாங்கியதாக சொல்லிய கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. வாதி, 3ம் பிரதிவாதிக்கு கொடுத்த 1 ஏக்கர் நிலத்தில் 25 செண்ட் நிலத்தை 16.08.2010 தேதியில் நான் கிரையம் வாஙகியதாக சொல்லியுள்ளேன், அந்த பத்திரத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்திற்கு மூலதாரமான ஆவணங்களை எல்லாம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் நான் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல ஆவணங்கள் கிடைக்கததால் தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணங்களை எல்லாம் பார்த்தால் தாவா சொத்தை நான் கிரயைம் வாங்கவில்லை என்பது தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.471/10A பட்டா எண்.6441 அது 3ம்பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த 1 ஏக்கர் நிலத்தில் நான் வாங்கிய 25 செண்ட் நிலத்திற்கு தான் அந்த பட்டா என்றால் சரிதான். அது தாவா சொத்திற்கு அந்த பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் 3ம்பிரதிவாதிக்கு 07.12.1999 தேதியில் ஒரு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 14.07.2008 தேதியில் 1, 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதி மூலமாக எனக்கும், மரிய வில்பர்ட் என்பவருக்கும் எழுதிக்கொடுத்த கிரையம் ஆவணம் என்றால் சரிதான். அந்த **கிரையம் ஆவணம் வா.சா.ஆ.13** ஆகும். அந்த கிரைய ஆவணத்தில் வின்செனட் மச்சாது 07.12.1999 தேதியில் 1, 2 பிரதிவாதிகள் தனக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணம் மூலமாக எழுதிக்கொடுப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எத்தே பாதருக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. பட்டாவை பார்த்துள்ளேன். அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 , 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 07.12.1999 தேதியிட்ட பவர் ஆவணத்தில் சொத்து விபரத்தில் தங்கச்சிமடம் கிராமம் நொச்சிவாடியில் சர்வே எண்.471/1A1A3 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதை நான் பார்க்கவில்லை. 1, 2 பிரதிவாதிகளுக்கு மேற்படி சொத்தை 01.11.1994 தேதியிட்ட கிரையம் பத்திரம் மூலமாக அந்தோணி பிச்சை வாரிசுகளான ரெத்தினம் மனைவி ஜோதி, மகள் எமல்டா, ஜான்பாஸ்கோ மற்றும் அலங்காரம் ஆகியோர்களிடம் இருந்து கிரையம் வாங்கியது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அவர்கள் தான் அந்தோணி பிச்சையின் பேரன் என்பது தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அந்த கிரைய ஆவணத்தில் சொத்து விபரத்தில் சர்வே எண்.471, த.கு.50, செண்ட் 30, புஞ்சை நிலத்தில் சுவக்கின் அந்தோணியம்மாள் பங்கு நீக்கி, லேட். அந்தோணி பிச்சை அவர்கள் மூலம் எங்களுக்கு பாத்தியப்பட்ட 5 ஏக்கர் 3 செண்ட் என்று அந்தோணிபிச்சையின் வாரிசுகள் சொல்லியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விபரங்கள் எல்லாம்எனக்கு தெரியும் வேண்டுமென்றே அந்த பத்திரங்களை எல்லாம்

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.12.19 15:40:32 +0530

மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 14ம்பிரதிவாதி லோகா நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக் கோரி மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதில் அவர் கிரையம் பெற்ற சர்வே எண்.471/1A1A உட்பிரிவு.471/10B 7 1/2 செண்ட் சொத்தை பொறுத்துதான் அந்த கமிஷன் மனு போட்டார் என்றால் சரிதான். 14ம் பிரதிவாதி லோகா வழக்கில் இறந்து போன 9ம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். 9ம் பிரதிவாதிக்கு நானும், மரிய வில்பர்டும் சேர்ந்து தான் 7 1/2 செண்ட் கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான் பவர் மூலமாக கொடுத்தோம். அந்த சர்வே நம்பர். 471/10B ஆனது நான் 3ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் வாங்கிய சொத்தில் உட்பட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே எதிர்வழக்குரையில் 471/10B 3ம்பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்ற 25 செண்ட் நிலத்திற்கு கட்டுப்பட்டது என்று சொல்லியுள்ளேன் தற்போது அதை மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் சர்வே எண்.471/10B ஐ தான் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த 471/10B யில் தான் 14 ம்பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் தாவா சொத்தில் வீடு கட்டவில்லை என்றால் சரியல்ல தாவா சொத்தில் தான் கட்டியுள்ளார். எத்தே பாதரிடமிருந்து வாங்கிய 35 செண்ட் சொத்திலிருந்து 8ம் பிரதிவாதி உமாபிரியா, 9ம் பிரதிவாதி டிட்டோ என்ற மாஸ்லின் டிட்டோ, 10ம் பிரதிவாதி அந்தோணி லிவிங்ஸ்டன், 11ம் பிரதிவாதியான பெர்னாட்ஷா பெர்ணான்டோ ஆகியோருக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். எனது முன்னோர்களுக்கு கிரையம் கொடுத்த அந்தோணி பிச்சை வகையறாவே சுவக்கின் அந்தோணியம்மாள் பங்கு நீக்கி கிரையம் கொடுத்துள்ள நிலையில் சுவக்கின் அந்தோணியம்மாளிடமிருந்து கிரையம் பெற்ற வாதியின் உரிமையை நான் மறுக்க முடியாது என்றால் சரியல்ல. வாதி கிரையம் பெற்றதன் அடிப்படையில் தாவா சொத்திற்கு வாதியின் பெயரால் பட்டா நம்பர்,1053 ஏற்பட்டுள்ளது என்றால் நான் கிரையம வாங்கும்போது வின்செண்ட், இருதயராஜ் பெயரில் பட்டா இருந்தது. வா.சா..ஆ.3 ஆவணத்தில் பின்புறத்தில் உள்ள புலப்படத்தில் கிழக்கு நான்குமாலாக சர்வேஎண்.471/1A1A3 என்று நான்குமாலாக காட்டப்பட்டுள்ளது இந்த கிழக்கு பக்கம் உள்ள சொத்தை தான் 1, 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்று அவர்களிடமிருந்து நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல வாதி சொத்திற்கு வடக்கு பக்கம் தான் கிரையம் வாங்கியுள்ளேன். வா.சா.ஆ 3ல் வடக்கு பக்கம் சர்வே எண்.406 அநாதினம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் தெரியாது நான் வாங்கிய சொத்திற்கு வடக்கு பக்கம் தான் அநாதினம். வாதி தான் வாங்கிய சொத்திற்கு வா.சா.ஆ.4 ஆவணம் மூலம் 9(2) பெற்றுள்ளார் வா.சா.ஆ.5 மூலமாக வரி பதிவு பெற்றுள்ளார் வா.சா.ஆ 6 சிறுவிவசாயிகளுக்கான அடையாள அட்டை பெற்றுள்ளார் அனைத்தும் தாவாசொத்திற்கு தெற்கேயுள்ளது. தாவா சொத்திற்கு தெற்கேயுள்ளது என்று பொய்யாக சொல்கிறேன என்றால சரியல்ல. அதனால் தாவா சொத்து வாதி அசல் உரிமையாளராக சுவக்கின் அந்தோணியம்மாள் மூலம் கிரையம் பெற்று அவர் பெயரால் பட்டா, வரி பதிவு ஏற்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது

S
ILAIYARAJA
Digitally
signed by S
ILAIYARAJA
Date:
2024.12.19
15:40:42
+0530

என்றாலும், வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்களை 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கு நான் மோசடியாக எழுதிக்கொடுத்துள்ளேன் என்றாலும், அந்த கிரைய ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும், அது வாதி கிரையம பெற்ற கிரைய ஆவணத்தையோ, தாவாசொத்தையோ எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றாலும், எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லக்கூடிய மூலதாரா ஆவணங்கள் வழக்கில் தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளதால் எனது எதிர்வாதம் சட்டப்படிஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுதத 1 முதல் 3 பிரதிவாதிகளை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்கலாம் என்றால் சரிதான். வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.12.19 15:40:48 +0530